விளம்பி ஹூ ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2018

ஸ்ரீ:

மலர்: 1
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com






விளம்பி ௵ ஆடி ௴
ஜூலை - ஆகஸ்ட் 2018

மலர்: 1
இதழ்: 4

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விஶ்வரூபம் | 6.00 | - | விஶ்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - ஶயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004, போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

விளம்பி வருஷப் பிறப்பன்று தேவஸ்தான வெளியீடாக ‘தேஶிக ஸந்தேஶம்’ என்ற மாதாந்திர இதழ் பிறந்தது. அது ஒரு தொடக்கமே.

ஸ்வாமி தேஶிகனின் 750-வது திருநக்ஷத்ர ஆண்டை முன்னிட்டு, அன்னாரின் பல்முனைத் திறனை நம்மால் இயன்ற அளவுக்கு வெளிக் கொணர்வது நம் கடமையாகும்.

அம்முயற்சியில் இம்மாதம் திறந்தது தேவஸ்தான வளாகத்தில் ‘தேஶிக நூலகம்’. இவ்விதழில் இதன் திறப்பு விழா பற்றிய குறிப்பும் (Trustees' Note), படங்களும் (வண்ணப்படத் தொகுப்பின் நிறைவுப் பக்கம்) வாசகர்களின் கண்ணுக்கும் எண்ணத்துக்கும் விருந்தாக அமையும் என நம்புகிறோம். இந்நூலகத்தின் விரிவாக்கத்திலும் / நல்ல முறையில் பயன்படுத்தி உய்வதிலும் பங்கேற்க ஆஸ்திகர்களை அன்புடன் அழைக்கிறோம்

வழக்கமாக வெளியாகும், உத்ஸவங்களின் காக்ஷிகள் / கட்டுரைகள் இவற்றுடன், ஸ்வாமி தேஶிகன் விஷயமாக ஒரு அன்பர் புனைந்த ‘ஸ்ரீ நிகமாந்த தேசிகன் திருச்சின்னமாலை’ என்ற தமிழ்க் கவிதையும்; ஆனி மாதத்தில் அகில உலக நன்மைக்காக தேவஸ்தானத்தில் நடத்தப்பட்ட ஸ்ரீ ஸுதர்ஶன மஹா யஜ்ஞத்தைப் பற்றிய குறிப்பும் / படங்களும் இதழுக்கு சிறப்பூட்டுவதாகும்.

இத்துடன் நான்கு இதழ்களை வாசகர்கள் வாசித்திருப்பர். இதைப் பற்றிய தங்கள் கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ள அழைக்கிறோம்.

# IN QUEST FOR KNOWLEDGE

## FROM THE DESK OF TRUSTEES

Dear Devotees,

It always is a pleasant and gratifying feeling when an endearing and enduring plan becomes a reality.

This Monthly Magazine **'DESIKA SANDESAM'** -- which focuses mainly on the various Utsavams, happenings and the forthcoming events of our temple -- is one such cherished experience. We are glad to share with you that It has been very well received with plenty of positive feedbacks.

Last month was a very eventful one and we had S**RI SUDARSANA MAHA YAJNYAM** performed for the benefit of the society at large. Archaka Swamis from many prominent Divyadesams took part

## NEW BEGINNING



**The members of the present Electoral Board, along with the Trustees:**

**Sitting:** Sri N.S. Ranganathan (President), two of the Trustees Sri N. Kasturi Rangan and Sri R. Mugunthan, Sri R. Anantha Padmanabhan (Secretary) and Sri R. Murali Krishnan.

**Standing:** Sri G.K. Sampathkumar, Sri N.V. Venkatesan, Sri N. Sathyanarayanan, Sri L.N. Srinivasan, Sri S. Bakthisaran, Sri G. Kakuthan, Sri A. Srivatsan and Sri Balaji Raghavan.

ஸ்ரீ:

> *Sri Vedantha Desika is one of the greatest names of Srivaishnava philosophy and a shining jewel in the Indian spiritual tradition*
>
> ***Prime Minister Narendra Modi***

and performed the Homam, with Sri U.Ve. Azhisur Srinivasacharyar at the helm. Hundreds of devotees sat through the day, soaked in the divine experience and received the blessings of Sri Sudarsana.

As you may be aware, the talk of the town now is the Hon'ble Prime Minister's message on the **750th BIRTH ANNIVERSARY CELEBRATIONS** of our illustrious Acharya Sri Vedanta Desika. It is also a matter of pride for the Sath Sampradayam that the British Parliament will commemorate the milestone at the House of Commons on 18th July.

In this connection, we are discussing about various events to be conducted in our temple. Following 'Desika Sandesam', and in another significant development, the **'DESIKAR LIBRARY'** was inaugurated at our Temple premises on 11th July by Sri U. Ve. Dr. Padmanabhacharyar, Srikaryam, Sri Ahobila Mutt. We take this opportunity to thank Sri Raghavan for his contribution in setting up the Library Block. We hope this initiative, which is open to all devotees, will benefit many in their quest of knowledge for years to come.

There are several other plans too, as part of Swami Desika-750 celebrations, such as organising a series of Upanyasams by eminent scholars, music concerts, etc. Some are given below and the ones which are under finalisation procedure will be published in the next issue.

**August 16 & 17**
Upanyasam by
Sri U.Ve. Villur Karunakaracharyar Swami

**August 18 & 19**
Harikatha
by Kalyanapuram
Sri U.Ve. Aravamudacharyar Swami

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# ஸ்ரீ நிகமாந்த தேசிகன் திருச்சின்னமாலை

ஸ்ரீ உ.வே. மெய்யூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

திருமலைமால் திருமணியாய் திகழ்ந்தார் வந்தார்
திசையெங்கும் புகழோங்கும் தேவன் வந்தார்
அருள்வரதர் அருள்பெற்றார் அசைந்து வந்தார்
அன்பர்க்கே அன்பனாகும் அன்பன் வந்தார்
பெரும்பூதூர் மாமுனியின் பத்தர் வந்தார்
புன்முறுவல் பூத்த முகத்தழகர் வந்தார்
குருமுகமாய் கலையனைத்தும் கற்றார் வந்தார்
குலவிளக்காம் தூப்புலம்மான் வந்தார் தாமே. (1)

சந்தமிகு தமிழ் மறையோன் துலங்கி வந்தார்
சில்லரை ரகசியங்களைத் தந்தார் வந்தார்
மந்திரமூன்றின் பொருள் உரைத்தார் வந்தார்
முத்திக்கு வழிவகுத்த வள்ளல் வந்தார்
அந்தமில் பேரின்பம் அளிப்பார் வந்தார்
அடியவர்க்கருள் புரியும் அண்ணல் வந்தார்
சிந்தைதனில் இனித்தருளும் சீலர் வந்தார்
குருவரராம் தேசிகனார் வந்தார் தாமே. (2)

திருவோணத் திருநாளில் உதித்தார் வந்தார்
திருமாலின் இலச்சினையைத் தரித்தார் வந்தார்
திருமகளின் மனமுகக்கத் திகழ்ந்தார் வந்தார்
கவிதார்க்கிக சிங்கமாய்ச் சிறந்தார் வந்தார்
திருச்சின்னமாலை தனைச் செப்பினார் வந்தார்
தருமநெறி தவறாமல் இருந்தார் வந்தார்
திருச்சின்னம் பெற்றுகந்த செல்வர் வந்தார்
நிகமாந்த தேசிகனார் வந்தார் தாமே. (3)





அரங்கநகரப்பன் அருள் அடைந்தார் வந்தார்
அம்புயத்தாள் அகமகிழத் துதித்தார் வந்தார்
வரந்தரும் வண்மைமிகு வள்ளல் வந்தார்
வாதியரை வெல்லும் சீர் வித்தகர் வந்தார்
கரங்கலந்த ஞானமுத்திரைத் திகழ வந்தார்
கரத்திலமர் சுவடியுடன் சிறந்து வந்தார்
பரசமயப் பனிவிலக்கும் பரிதி வந்தார்
வேதாந்த தேசிகனார் வந்தார் தாமே. (4)

நிகரில் மாறன்மறை கற்றார் வந்தார்
நம்முடை வினையகற்றும் நாதன் வந்தார்
நகத்தினால் தூண்கீறி நோய் தீர்ந்தார் வந்தார்
துன்பந்தவிர் தோத்திரங்கள் செய்தார் வந்தார்
நிகரில்சீர் ஸ்ரீபாஷ்யம் ஓதுவித்தார் வந்தார்
கவிதார்க்கிக சிங்கமெனத் திகழ்ந்தார் வந்தார்
செகம்புகழும் சேவகனார் சிறந்து வந்தார்
தனக்கொத்தார் இல்லாதார் வந்தார் தாமே. (5)

பரிமுகனின் அருள்பெற்ற புனிதர் வந்தார்
பரிவுடனே ப்ரபந்தசாரம் உரைத்தார் வந்தார்
கருடனிடம் மந்திரங்கொண்டு உகந்தார் வந்தார்
கருடனுளம் மகிழ்ந்திடவே துதித்தார் வந்தார்
பரமபத சோபானம் அமைத்தார் வந்தார்
பரமதங்களை பங்கம் செய்வித்தார் வந்தார்
திருவயிந்தைத் திருநகரில் திளைத்தார் வந்தார்
திருப்பொலிந்த தேசிகனார் வந்தார் தாமே. (6)

கலியனுரை குடிகொண்ட கருத்துடயார் வந்தார்
திருப்பாணர்தாள் பரவும் தொண்டர் வந்தார்
கலியினிடர் கடிந்திட்ட கோமான் வந்தார்
திருமழிசைப்பிரான் தமிழில் திளைத்தார் வந்தார்
கவியரசர் விட்டுசித்தன் இசை கற்றார் வந்தார்
கோதைதமிழ் பாமாலை மனம் வைத்தார் வந்தார்
கவித்திலகம் குலசேகரன் சொல்லுகந்தார் வந்தார்
தமிழ்மறையின் சுவையறிந்தார் வந்தார் தாமே. (7)

மதுரகவியாழ்வார்தம் பட்டறிந்தார் வந்தார்
மகிமாறன் மனத்துறையுமம்மான் வந்தார்
மதுரமொழி திருமாலை மனங்கொண்டார் வந்தார்
பதுமமணிமாலை திகழ்மார்வன் வந்தார்
மதுத்துளவமணிமாலை விளங்க வந்தார்
மதுரக்குழல் மாதவன்தாள் பணிந்தார் வந்தார்
மதுச்சுவைகாப்பியத்தை படைத்தார் வந்தார்
மனங்கவரும் தேசிகனார் வந்தார் தாமே. (8)





முதலாழ்வார் மூவர்தம் பாட்டறிந்தார் வந்தார்
பாதுகைக்கு நாலெட்டு பத்தி பாடினார் வந்தார்
மதமழித்து வைராக்யம் பூண்டார் வந்தார்
மதுரமொழி தேசிகனார் மகிழ்ந்து வந்தார்
பதமலர் மிகவிளங்கும் புனிதர் வந்தார்
பாதகர்க்கும் அருள்புரியும் பண்பர் வந்தார்
புதல்வரின் பாட்டுகந்தப் பெம்மான் வந்தார்
பெருமை மிகு தேசிகனார் வந்தார் தாமே. (9)

சிரங்கலந்த சிகைவிளங்கும் சிட்டர் வந்தார்
திக்கெட்டும் புகழ்மணக்கும் புனிதர் வந்தார்
துரங்கமுகர் சொல்லுகந்த சிங்கம் வந்தார்
தூயதமிழ்க் கவிபாடும் கவிஞர் வந்தார்
வரதருக்கு அடிமை பூண்ட விமலன் வந்தார்
வேதாந்த ஆசிரியர் விரைந்து வந்தார்
நரங்கலந்த சிங்கனிசை கேட்பார் வந்தார்
நலந்தரும் தேசிகனார் வந்தார் தாமே. (10)





## கோடை உத்ஸவம்













ஸ்ரீ:





## கோடை உத்ஸவம்











கோடை உத்ஸவம்





## ஸ்ரீ ஸுதர்சந ஜயந்தி











ஸ்ரீ ஸுதர்சந மஹாயஜ்ஞம்









ஸ்ரீ ஸுதர்சந மஹா யஜ்ஞம்









ஸ்ரீ ஸுதர்சந மஹா யஜ்ஞம்





## ஸ்ரீ ஸுதர்சந மஹா யஜ்ஞம்









## நாதமுனிகள் திருநக்ஷத்ரம்



ஸ்ரீ:










'தேசிகர் நூலகம்' திறப்பு விழா













| விளம்பி வருட ஆடி மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | |
| ஜூலை / ஆகஸ்ட் | ஆடி | | | | | |
| 16.07.18 | | சதுர்த்தி | திங்கள் | மகம் | தக்ஷிணாயன புண்ணியகாலம் காலை பெருமாள், தாயார் மூலவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பொழுதுடன் ஆராதனம் பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ. S. ராம ஸ்வாமி – ஸ்ரீ S. பார்த்தஸாரதி |
| 17.07.18 | 1 | பஞ்சமி | செவ்வாய் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 18.07.18 | 2 | ஷஷ்டி | புதன் | உத்திரம் | காலை தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ S.V.S. இராகவன் |
| 19.07.18 | 3 | ஸப்தமி | வியாழன் | ஹஸ்தம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | |
| 20.07.18 | 4 | அஷ்டமி | வெள்ளி | சித்திரை | காலை பெருமாள் , தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ K. ரவி |
| 21.07.18 | 5 | நவமி | சனி | ஸ்வாதி | லக்ஷ்மி நரசிம்மர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம் மாலை ஆஸ்தானம் | |
| 22.07.18 | 6 | தசமி | ஞாயிறு | விசாகம் | நம்மாழ்வார் | |
| 23.07.18 | 7 | ஏகாதசி | திங்கள் | அனுஷம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | |
| 24.07.18 | 8 | த்வாதசி | செவ்வாய் | கேட்டை | தொண்டரடிப் பொடிகள் | |
| 25.07.18 | 9 | த்ரயோதசி | புதன் | மூலம் | திருமால்வடை | |
| 26.07.18 | 10 | சதுர்த்தசி | வியாழன் | பூராடம் | சேனைநாதன் | |
| 27.07.18 | 11 | பௌர்ணமி | வெள்ளி | உத்திராடம் | கஜேந்திர மோக்ஷம் ஆளவந்தார் திருநக்ஷத்ரம் இரவு சந்திர க்ரஹணம் காலை பெருமாள், ஆளவந்தார் திருமஞ்சனம் மாலை சேவாகாலம், சாற்றுமுறை, பொழுதுடன் ஆராதனம் இரவு பெருமாள் கருட வாஹநம், ஆளவந்தார் கேடயம் புறப்பாடு | ஸ்ரீ M.K.R. குடும்பத்தினர், ஸ்ரீ. ரமேஷ், ஆளவந்தார் ஸ்ரீ பத்ரி நாராயணன் |
| 28.07.18 | 12 | பிரதமை | சனி | திருவோணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ்சனம் மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. சேஷாத்ரி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29.07.18 | 13 | த்விதீயை | ஞாயிறு | அவிட்டம் | திருமால்வடை | |
| 30.07.18 | 14 | திருதீயை | திங்கள் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 31.07.18 | 15 | சதுர்த்தி | செவ்வாய் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்சனம்<br>மாலை பேயாழ்வார் வீதி<br>புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ<br>ஸ்ரீபாதம்<br>கைங்கர்யம்<br>அஸோஸியேஷன் |
| 01.08.18 | 16 | பஞ்சமி | புதன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 02.08.18 | 17 | ஷஷ்டி | வியாழன் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 03.08.18 | 18 | ஸப்தமி | வெள்ளி | ரேவதி | காலை பெருமாள், தாயார்<br>மூலவர் தாயார் உத்ஸவர்<br>திருமஞ்சனம்<br>மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ S. சுந்தரம் |
| 04.08.18 | 19 | அஷ்டமி | சனி | அச்வினி | திருவாடிப்பூர உத்ஸவம்<br>1ம் நாள் காலை ஆண்டாள்<br>திருமஞ்சனம்<br>மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ L.V. நரசிம்மன் |
| 05.08.18 | 20 | நவமி | ஞாயிறு | பரணி | திருவாடிப்பூர உத்ஸவம் 2ம் நாள்<br>காலை ஆண்டாள் திருமஞ்சனம்<br>மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ<br>ராஜகோபாலன் |
| 06.08.18 | 21 | தசமி | திங்கள் | கார்த்திகை | திருவாடிப்பூர உத்ஸவம்<br>3ம் நாள்<br>காலை ஆண்டாள் திருமஞ்சனம்<br>மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 07.08.18 | 22 | ஏகாதசி | செவ்வாய் | ரோஹிணி | திருவாடிப்பூர உத்ஸவம்<br>4ம் நாள் காலை பெருமாள்,<br>ஆண்டாள் திருமஞ்சனம்<br>மாலை பெருமாள் வீதி புறப்பாடு,<br>ஆண்டாள் ஆஸ்தானம் | ஸ்ரீ<br>P.R. ஸ்ரீநிவாஸன் |
| 08.08.18 | 23 | த்வாதசி | புதன் | மிருகசீரீஷம் | திருவாடிப்பூர உத்ஸவம் 5ம் நாள்<br>காலை ஆண்டாள் திருமஞ்சனம்<br>மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ.C.R.இராகவன் |
| 09.08.18 | 24 | த்ரயோதசி | வியாழன் | திருவாதிரை<br>/ புனர்வஸு | திருவாடிப்பூர உத்ஸவம் 6ம் நாள்<br>காலை ஆண்டாள் திருமஞ்சனம்<br>மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 10.08.18 | 25 | சதுர்த்தசி | வெள்ளி | புஷ்யம் | திருவாடிப்பூர உத்ஸவம் 7ம்<br>நாள் காலை பெருமாள், தாயார்<br>மூலவர், தாயார் உத்ஸவர்,<br>ஆண்டாள் உத்ஸவர் திரு<br>மஞ்சனம் மாலை தாயார் உள்<br>புறப்பாடு, ஆண்டாள் ஆஸ்தானம் | தாயார் ஸ்ரீ<br>T.R. ஸ்ரீநிவாஸன்<br>ஆண்டாள் ஸ்ரீ<br>T.R. தேவநாதா<br>சார்யர் |
| 11.08.18 | 26 | அமாவாசை | சனி | ஆயில்யம் | திருவாடிப்பூர உத்ஸவம்<br>8ம் நாள் காலை பெருமாள்<br>உத்ஸவர், ஆண்டாள் உத்ஸவர்<br>திருமஞ்சனம் மாலை பெருமாள்<br>வீதி புறப்பாடு, ஆண்டாள்<br>ஆஸ்தானம் | அமாவசை<br>ஸ்ரீ கோவிந்தன்,<br>ஆண்டாள்<br>ஸ்ரீ வேங்கட<br>நரசிம்மன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12.08.18 | 27 | பிரதமை / த்விதியை | ஞாயிறு | மகம் | திருவாடிப்பூர உத்ஸவம் 9ம் நாள் காலை ஆண்டாள் திருமஞ்சனம் மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 13.08.18 | 28 | திருதீயை | திங்கள் | பூரம் | திருவாடிப்பூர உத்ஸவம் காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம் மாலை பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு, இரவு திருக்கல்யாண உத்ஸவம், சேர்த்தி சேவை | ஸ்ரீ ஸ்ரீநிவாசன் K. ஸ்வாமி |
| 14.08.18 | 29 | சதுர்த்தி | செவ்வாய் | உத்திரம் | ஊர்கோல உத்ஸவம் மாலை பொழுதுடன் ஆராதனம், பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 15.08.18 | 30 | பஞ்சமி | புதன் | ஹஸ்தம் | ஜேஷ்டாபிஷேகம் பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர் 81 கலச திருமஞ்சனம் கருட பஞ்சமி கருடன் திருமஞ்சனம் | ஸ்ரீ R. கோபால சுவாமி ஐயங்கார் பண்டு ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி |
| 16.08.18 | 31 | ஷஷ்டி | வியாழன் | சித்திரை | மதுரகவிகள் | |

## வைணவ வழக்கு - ஒரு 10 சொல் பழகுவோம்

| | | |
|---|---|---|
| அமுது | = | படைக்கும் சோறு |
| கோவிலாழ்வார் | = | எம்பெருமான் இருக்கும் அறை |
| கோஷ்டீ | = | தொண்டர் குழு |
| சாத்துப்படி | = | அலங்காரம் |
| சாற்றுமுறை (அ) சாற்றுமறை | = | வேதம்/ ப்ரபந்தம் நிறைவு செய்தல் |
| தோளுக்கினியான் | = | பெருமாள் உலா வரும் பலகை |
| தொடக்கம் | = | வேதம்/ ப்ரபந்தம் ஆரம்பம் |
| விநியோகம் | = | பகிர்வது |
| ஶடாரி | = | எம்பெருமானின் திருவடிநிலை |
| ஸேவாகாலம் | = | வேதம்/ ப்ரபந்தம் சொல்வது |

## ஆடியில் முக்கிய உத்ஸவங்கள்

**ஆளவந்தார் திருநக்ஷத்ரம்**
(ஆடி - உத்திராடம்),
**கஜேந்த்ர மோக்ஷம்**
(ஆடி-பௌர்ணமி)
ஜூலை 27 (வெள்ளி)

---

**ச்ரவண உத்ஸவம்**
ஜூலை 28 (சனி)

---

**திரு ஆடிப்பூர உத்ஸவம் (11 நாட்கள்)**
ஆகஸ்ட் 4 (சனி) முதல்
ஆகஸ்ட் 14 (செவ்வாய்) வரை
**★ ஆகஸ்ட் 13 - திரு ஆடிப்பூரம்**
**★ ஆகஸ்ட் 14 - ஊர்கோல உத்ஸவம்**

---

**ஜ்யேஷ்டாபிஷேகம்**
ஆகஸ்ட் 15 (புதன்)

ஸ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

**ஸ்வாமி தேஶிகன், திருவஹீந்திர புரத்துலேயே தான் அப்பறம் எள்ளியிருந் தாரா ?**

**பங்கஜம் பாட்டி:** நல்ல ஆசார்யர் என்பவர் எப்படிப்பட்டவரா இருப்பர் அப்படீன்றதுக்கு ஒரு ஶ்லோகம் சொல்லுவா -ஸம்ப்ரதாயத்தப் பத்தியும் / பெருமாளப் பத்தியும் நெறைய புஸ்தங்கள் எழுதுவா; பல பேருக்கு நல்ல விஷயங்கள சொல்லிக் கொடுப்பா ; அப்பறம், ஆங்காங்கே திவ்யதேஶங்களுக்குச் சென்று பெருமாள ஸேவிசுண்டு, முடிஞ்ச கைங்கர்யங்கள பண்ணிண்டிருப்பா - அப்படீன்னு. இந்த மூணு கார்யங்களையுமே ஸ்வாமி கடபிடிச்சிண்டிருந்தார். அதனால, கொஞ்சநாள் திருவஹீந்திரபுரத்துலே வஸித்த அவர், திவ்யதேஶ யாத்ரையாக



காஞ்சீபுரத்துக்குத் திரும்பி எள்ளினார். வழில (ரேழி போன்று) திருக் கோவலூர் த்ரிவிக்ரம பெருமாள ஸேவிச்சு, அவரபத்தி 'தேஹளீஶ ஸ்துதி' என்னும் ஸ்தோத்ரம் பாடினார். 'தேஹளீ' அப்படீன்னா ''இடைகழி''ன்னு அர்த்தம். அதுதான் மருவி 'ரேழி'ன்னு ஆயிடுத்து. அப்பறம் பெருமாள் கோவிலுக்கு எள்ளினார்.

**ஸுமதி :** பாட்டீ ! பெருமாள்கோவில்-னு எந்த ஊரச் சொல்றங்கோ? எல்லாமே, பெருமாள் கோவில்தானே!

**பங்கஜம் பாட்டி :** நன்னா கேட்டே. காஞ்சீபுரத்த தான் பெரியவா பெருமாள் கோவில்-னு சொல்லுவா. அது, எல்லா வைஷ்ணவக் கோயில்களையும் பொதுவா குறிக்கும் பெயராச்சே அப்படீன்னு நீ கேக்கற. இப்படி, பொதுப்பெயரையே தனிப் பெயரா சொல்றது தான் அந்த க்ஷேத்ரத்தின் சிறப்பே.

**ஸுமதி:** ஸாரி பாட்டீ! குறுகிடர்த்துக்கு. ஶ்ரீரங்கம்தானே நமக் கெல்லாம் முக்கியமான க்ஷேத்ரம்; அத என்னன்னு சொல்லுவா ?

**பங்கஜம் பாட்டி:** (சிரிச்சிண்டே) அத 'பெரியகோவில்' அல்லது 'கோவில்'ன்னு குறிப்பிடுவா. இருக்கட்டும். மூன்றாவது விஶேஷ திவ்ய தேஶமான திருப்பதியை எப்படிச் சொல்லுவா என்பதையும் சொல்லி விடுகிறேன் - திருமலை-ன்னு.

**ஸுமதி:** பாட்டீ! இப்போ புரியறது - தாத்தா அடிக்கடி 'கோயில்-திருமலை- பெருமாள் கோவில்'-னு இந்த மூணு திவ்யதேசங் களையும் சேர்த்துச் சொல்லுதின் அர்த்தம் இதான்னு.



**பங்கஜம் பாட்டி :** ஆமாம். பிறகு காஞ்சீபுரத்துல கொஞ்ச நாள் வாஸம் பண்ணச்சே 'வரதராஜ பஞ்சாஶத்' போன்ற ஸ்தோத்ரங்கள் / அடைக்கலப்பத்து முதலான ப்ரபந்தங்கள், இன்னும் பல ஸம்ப்ரதாய ரஹஸ்ய க்ரந்தங்கள் முதலானவற்றை அருளிச் செய்தார். அனேகம் ஶிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் ஸாதித்தார். அருகிலுள்ள திருவெஃகா, திருப்புட்குழி போன்ற திவ்யதேஶத்து பெருமாளை ஸேவித்து ஸ்தோத்ரங்கள் செய்தார்.

**ஸுமதி :** பாட்டி! திருப்புட்குழி பற்றி ஒரு சரித்ரம் சொல்றாளே, அதைக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

**பங்கஜம்பாட்டி:** சொல்றேன். 'புள்' அப்படீன்னா, பறவை; குழி-ன்னு ஈமக்கடன்கள் செய்த இடம். ராமாவதாரத்திலே தனக்காக உயிரை விட்ட ஜடாயு பக்ஷியை, ராமன் குழியிலிட்ட இடமாதலால் இது (திரு + புள் + குழி) திருப்புட்குழி என வழங்கப்படுகிறது.

பிறகு திருமலை சென்று திருவேங்கடமுடையானை ஸேவிக்கப் புறப்பட்டு வழியில் சோளஸிம்ஹபுரம் என வழங்கப்படும் கடிகாசலத்தில் எழுந்தருளியிருக்கிற அக்காரக் கனியான ந்ருஸிம்ஹனை மங்களாஶாஸநம் செய்தார். பிறகு திருச்சுகனூரில் பத்மாவதித் தாயாரையும்; கீழே ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளையும் ஸேவித்துக் கொண்டு திருமலை ஏகினார். அங்கு, திருவேங்கடமுடையானின் தயைக்கு அடிமைப்பட்டு 'தயாஶதகம் என்ற அத்புதமான ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தார்; சில காலம் திருமலையிலே எழுந்தருளியிருந்து பல ஶிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தார்.

பின்பு, வடதேஶ-யாத்ரையாகச் செல்லப் புறப்பட்டார்.

**(தொடரும்)**





*With Best Compliments from:*

# S.P. RAMASAMI

## Prop. Karpagavinayaga Films Circuit,

**Old No. 322, New No. 58, Flat No. 2, Sathish Apartments,**

**Alagirisami Salai, K.K. Nagar, Chennai - 600 078.**

**SVDD thanks Sri S.P. Ramasami & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam

## அமாவாசை புறப்பாடு





## ஆனி கருடன் - பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்










**ஆனி ச்ரவண உத்ஸவம்**





